இதுபற்றிய முடிந்த முடிவைக் காணமுடியும். போக்குவரத்தில் வேகம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் விபத்துக்கள் குறைந்திருக்கின்றன என்று சொல்ல முடியும். விபத்தின் காரணமாக வேலை நீக்கம் அல்லது சிறைத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது, அப்படி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் தவறு செய்திருந்தால் அந்தத் தண்டனையை வேறு யாருக்குக் கொடுப்பது? அவர்களுடைய தவறு இல்லாமல் இருந்தால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்து, ஆவன செய்யும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை பெரும்பாலும் தனியார்கள் நடத்துகிறார்கள். ஓட்டுநர்களால் தவறுகள் நடைபெறுவதற்குக் காரணம் ஓட்டுநர்களுக்கு அந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே சரியான பயிற்சி அளிக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் அனைத்தையும் அரசே நடத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, உடனடியாக அத்தனை பயிற்சிப் பள்ளிகளையும் அரசாங்கம் எடுத்து நடத்துவது என்பது சரியல்ல, அது முடியாத ஒன்று. இருந்தாலும் மாவட்டந்தோறும் ஒரு பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று சொல்லி, இப்போது அதுபற்றி நாங்கள் நடவடிக்கை எடுத்து, முதல் தடவையாக 5 மாவட்டங்களில் பயிற்சி நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுத்திருக்கிறோம். படிப்படியாக எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படும்போது இந்தப் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன்.

போக்குவரத்துக்கழக டெப்போக்களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகள்.

*வினா எண் 17—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் டெப்போக்களிலும் சிற்றுண்டிச்சாலைகள் (காண்டீன்) உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றுள் போக்குவரத்துக்கழகமே நடத்துவன எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) 75 (எழுபத்தைந்து மட்டும்).

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்ததிலிருந்து இன்னும் பல பணி மனைகளில் சிற்றுண்டிச்சாலைகள் திறக்கப்படவில்லை என்று தெரிகிறது அதே நேரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனையில் சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டிருக்கிறது. அதன் அருகில் இருக்கிற பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனையில் சிற்றுண்டிச்சாலை இல்லாத காரணத்தால் அங்குள்ள பணியாளர்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனை சிற்றுண்டிச்சாலைக்கு செல்லும்போது பல தகராறுகள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த நிலை நீடிக்காமல் இருக்க, இந்தக் குறையைப் போக்க, பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனையில் உடனடியாக சிற்றுண்டிச் சாலை ஒன்று திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 100 பணியாளர்களுக்குமேல் இருக்கிற அத்தனை பணிமனைகளுக்கும் சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட வேண்டுமென்று கொள்கை முடிவு எடுத்து, அந்த வேலையைச் செய்து வருகிறது. நாங்களே இதை எல்லாம் செய்ய வேண்டியிருப்பதால் இன்னும் சில இடங்களில் சிற்றுண்டிச் சாலைகளைத் திறக்க முடியவில்லை. ஏற்கெனவே இருந்தவர்கள் கொஞ்சம் செய்திருந்தால் நாங்கள் இதற்குள் அந்தப் பணியை முடித்திருக்க முடியும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழக சிற்றுண்டிச்சாலை சம்பந்தப்பட்ட பிரச்சனை என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி, உடனடியாக பல்லவன் போக்குவரத்துக் கழக பணிமனையிலும் சிற்றுண்டிச்சாலை திறக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, நடந்தவை களைச் சொல்லி பல காரியங்களைத் தட்டிக்கழிக்க இங்கே பதில் சொல்கிறார்கள். அந்த நிலைமை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்திலிருந்த சிற்றுண்டிச்சாலை இரண்டு மாதங்களுக்கு முன்னால் எடுக்கப்பட்டுள்ளது. அங்கே இரண்டு மாதங்களாக சிற்றுண்டிச்சாலை இல்லாத காரணத்தால் அங்கு வருகிற பயணிகளுக்கு சிற்றுண்டி அருந்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அங்கும் சிற்றுண்டிச் சாலையைத் திறக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மூலக் கேள்வி தொழிலாளர்களுக்கு சிற்றுண்டிச்சாலை ஏற்படுத்துவது சம்பந்தமானது, பயணிகள் சம்பந்தப்பட்டது அல்ல. அது வேறு, இது வேறு.

1982 செப்டம்பர் 7]

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களே ஏற்று தொழிலாளர்களுக்காக நடத்துகிற இந்தச் சிற்றுண்டிச் சாலைகளில் தனியார் நிறுவனங்களில் இருப்பதைப் போல சப்சிடைஸ்ட் ரேட்டுகளில் குறைந்த விலையில் 10 காசு இட்டிலிகள், 20 காசு பொங்கல் என்பது போன்று, டி.வி.எஸ். நிறுவனங்களில் கூட கொடுக்கிறார்கள். அது போல் கொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படித்தான் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நாட்டுடமைத் திட்டங்கள் வெளியிடப்பட்டு மனுக்கள் பரிசிலிக்கப்படாமலுள்ள புதிய வழித்தடங்கள்

*வினா எண் 18—திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதிய வழித்தடங்கள் தருவதற்காக மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளால் மனுக்கள் கோரப்பெற்று பரிசீலிக்கப்படுகின்ற நேரத்தில், அதே வழித்தடங்களுக்கு நாட்டுடமைத் திட்டங்கள் வெளியிட்டு அந்த மனுக்கள் பரிசீலிக்கப்படாமல் மாவட்ட போக்குவரத்து அதிகாரிகளிடம் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மனுக்கள் எத்தனை ? வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) மனுக்கள் 432; வழித்தடங்கள் 67.

திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகளுக்கு புதிய வழித்தடங்கள் கொடுக்கும் விஷயமாக, அதை நடைமுறைப்படுத்த, பி.டி.சி. யிலிருந்து ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அவர் 4 மாத காலமாக புது மாற்று வழித்தடங்கள் கொடுப்பதிலோ அல்லது இருக்கிற வண்டிகளுக்கு வேரியேஷன் கொடுப்பதிலோ செயல்படாமல் இருக்கிறாரே, அவருக்கு எப்போது அதிகாரம் கொடுக்கப்போகிறீர்கள் ? உடனடியாக அவருக்கு அதற்கான அதிகாரங்களைக் கொடுத்து, இவைகளை அமுல்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.